# நசரேன் திருச்சபை

## எமது விசுவாசக் கட்டுரைகள்

### கட்டுரை 1

### திரித்துவ தேவன்

நித்தியமாக இருக்கிறவரும், முடிவில்லாத தேவனும், உன்னதமான சிருஷ்டிகரும், இந்த பிரபஞ்சத்தைப் பராமரிப்பவருமானவரை நம்புகிறோம். அவர் ஒருவரே தேவன். தன்மையிலும், பண்புகளிலும், நோக்கத்திலும் பரிசுத்தமுள்ளவர். பரிசுத்தமும் அன்பும், ஒளியுமான இன்றியமையாத திரித்துவ தேவன், பிதா, குமாரன் பரிசுத்த ஆவியாக வெளிப்பட்டார்.

ஆதியாகமம் 1; லேவியராகமம் 19:2; உபாகமம் 6:4-5; ஏசாயா 5:16; 6:1-7; 40:18-31; மத்தேயு 3:16-17; 28:19-20; யோவான் 14:6-27; 1 கொரிந்தியர் 8:6; 2 கொரிந்தியர் 13:14; கலாத்தியர் 4:4-6; எபேசியர் 2:13-18; 1 யோவான் 1:5; 4:8

### கட்டுரை 2

### இயேசு கிறிஸ்து

திரியேக தேவத்துவத்தில் இரண்டாம் நபராகிய இயேசு கிறிஸ்துவை நம்புகிறோம். என்றென்றைக்கும் பிதாவோடு ஒரே பொருளானவர். பரிசுத்த ஆவியினாலே மனித உருவெடுத்து, கன்னி மரியாளிடத்தில் பிறந்தார். ஆகையால், இரண்டு முழுமையான, பூரணமான தன்மைகள் அதாவது தேவத்தன்மையும், மனிதத்தன்மையும் இணைந்து, முற்றிலும் தேவனும், முற்றிலும் மனிதனும் ஒரே நபராக இணைந்து, தேவமனிதனானார்.

இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உண்மையாய் மரித்தோரிலிருந்து எழுந்து, மீண்டும் தம்முடைய சரீரத்திலே, எல்லாக் காரியங்களிலும் பரிபூரண மனிதத்தன்மை உடையவராக, பரத்திற்கு ஏறி, அங்கே நமக்காக பரிந்துரை செய்கிறார் என்று நம்புகிறோம்.

மத்தேயு 1:20-25; 16:15-16; லூக்கா 1:26-35; யோவான் 1:1-18; அப்போஸ்தலர் 2:22-36; ரோமர் 8:3, 32-34; கலாத்தியர் 4:4-5; பிலிப்பியர் 2:5-11; கொலோசெயர் 1:12-22; 1 தீமோத்தேயு 6:14-16; எபெரெயர் 1:1-5; 7:22-28; 9;24-28; 1 யோவான் 1:1-3; 4:2-3, 15

## கட்டுரை 3

# பரிசுத்த ஆவியானவர்

திரியேக தேவத்தன்மையில் மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியை நம்புகிறோம். அவர் எப்பொழுதும் இருக்கிறவர், நமக்குள்ளும் கிறிஸ்துவின் திருச்சபையோடும் திறமையாக செயல்படுபவர், உலகத்தின் பாவத்தை அறிவுறுத்தி, மனம்திரும்பி விசுவாசிக்கிறவர்களை மறுஉருவாக்கி, விசுவாசிகளை பரிசுத்தப்படுத்துகிறவராய், இயேசு கிறிஸ்துவிலிருக்கிறபடி எல்லா சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துகிறவராயிருக்கிறார்.

> யோவான் 7:39; 14:15-18,26; 16:7-15; அப்போஸ்தலர் 2:33; 15:8-9; ரோமர் 8:1-27; கலாத்தியர் 3:1-14; 4:6; எபேசியர் 3:14-21; 1 தெசலோனிக்கேயர் 4:7-8; 2 தெசலோனிக்கேயர் 2:13; 1 பேதுரு 1:2; 1 யோவான் 3:24; 4:13

## கட்டுரை 4

# பரிசுத்த வேத வசனங்கள்

முழுமையான உத்வேகம் கொண்ட வேத வசனங்களை நம்புகிறோம். இதன் மூலம் 66 புத்தகங்களாகிய பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளைப் புரிந்துக்கொள்கிறோம். இவை தெய்வீக அகத்தூண்டுதலால் கொடுக்கப்பட்டு, நம்முடைய இரட்சிப்பிற்குத் தேவையான எல்லாக்காரியங்களிலும் பிழையில்லாமல் நம்மைப்பற்றிய தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறவைகளாயிருக்கிறது. எனவே அதில் இல்லாத எதையும் விசுவாசக் கட்டுரையாக உபதேசிக்கக்கூடாது.

> லூக்கா 24:44-47; யோவான் 10:35; 1 கொரிந்தியர் 15:3-4; 2 தீமோத்தேயு 3:15-17; 1 பேதுரு 1:10-12; 2 பேதுரு 1:20-21

## கட்டுரை 5

# பாவம், அசல் மற்றும் தனிப்பட்டது

நம்முடைய முதல் பெற்றோருடைய கீழ்ப்படியாமையின் மூலம் பாவம் இந்த உலகத்தில் வந்தது, பாவத்தின் மூலம் மரணம் வந்தது எண்ட்ட்ரு நாங்கள் நம்புகிறோம். பாவம் இரண்டு வகையானது என்று நம்புகிறோம்: அசல் பாவம் அல்லது ஒழுக்கக்கேடு மற்றும் உண்மையான அல்லது தனிப்பட்ட பாவம்.

அசல் பாவம் அல்லது ஒழுக்கக்கேடானது, ஆதாமுடைய சந்ததிகள் அனைவருடைய தன்மையிலும் ஊழல் வந்தது. காரணம் அனைவரும் உண்மையான நீதியைவிட்டு வெகுதூரம் போய்விட்டனர் அல்லது நம்முடைய முதல் பெற்றோர் சிருஷ்டிக்கப்பட்ட நேரத்தில் இருந்த அவர்களது தூய்மையான நிலையானது தேவனுக்கு இஷ்டமில்லாதவர்களாக, ஆவிக்குரிய வாழ்க்கை இல்லாமல், தீமைக்கு சாய்ந்தனர். அது தொடர்ந்து வருகிறது. மேலும் இருதயமானது பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தினாலே முற்றிலும் சுத்திகரிக்கப்படும்வரைக்கும் இந்த அசல் பாவமானது மறுபிறப்படைந்த புதிய வாழ்க்கையிலும் தொடர்ந்து இருந்துவருகிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

அசல் பாவமானது உண்மையான பாவத்திலிருந்து வேறுபடுகிறது, அதில் உண்மையான பாவத்திற்கு மரபுவழி நாட்டத்தை உருவாக்குகிறது. தெய்வீகமாக அதற்கு வழங்கப்படும் தீர்வை புறக்கணிக்கவோ நிராகரிக்கவோ செய்யாதபட்சத்தில் யாரும் அதற்கு பொறுப்பு அல்ல என்று நாங்கள் நம்புகிறோம்.

உண்மையான அல்லது தனிப்பட்ட பாவமானது ஒழுக்கரீதியில் பொறுப்பான ஒரு நபர் தேவனுடைய கட்டளையை அறிந்திருந்தும் அதை மனப்பூர்வமாக மீறுவது என்று நாங்கள் நம்புகிறோம். எனவே இதை தானாக மனம்வைத்து செய்யாத, தப்பிக்கமுடியாத குறைபாடுகள், பெலவீனங்கள், குறைகள், தவறுகள், தோல்விகள், அல்லது விழுகையின் விளைவாக, குறைபாடற்ற நன்நடத்தையிலிருந்து விலகிப்போன மற்ற தவறுகளோடு குழப்பிக்கொள்ளாதிருக்க வேண்டும். ஆயினும் இந்த குற்றமற்ற விளைவுகளில் கிறிஸ்துவின் ஆவிக்கு முரண்பாடான அணுகுமுறைகளையோ, மறுமொழியையோ உள்ளடக்கியது அல்ல. தனிப்பட்ட பாவமானது, பிரதானமாக மற்றும் முக்கியமாக அன்பின் கட்டளையை மீறுவதாகும் என்று நாங்கள் நம்புகிறோம்; இன்னும் கிறிஸ்துவுடனான சம்பந்தத்திலே பாவத்தை அவிசுவாசம் என்றும் வரையறுக்கலாம்.

அசல் பாவம்: ஆதியாகமம் 3; 6:5; யோபு 15:14; சங்கீதம் 51:5; எரேமியா 17:9-10; மாற்கு 7:21-23; ரோமர் 1:18-25; 5:12-14; 7:1-8:9; 1 கொரிந்தியர் 3:1-4; கலாத்தியர் 5:16-25; 1 யோவான் 1:7-8

தனிப்பட்ட பாவம்: மத்தேயு 22:36-40 (1 யோவான் 3:4 உடன்); யோவான் 8:34-36; 16:8-9; ரோமர் 3:23; 6:15-23; 8:18-24; 14:23; 1 யோவான் 1:9-2:4; 3:7-10

## கட்டுரை 6

# பரிகாரம்

இயேசு கிறிஸ்து தம்முடைய பாடுகளின்மூலம், தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தினதினாலும், சிலுவையின் மீதான தம்முடைய மரணத்தினாலும், எல்லா மனுக்குலத்திற்குமான பாவத்திற்கு பரிகாரத்தை செய்துவிட்டார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இந்த பரிகாரமே இரட்சிப்பிற்கான ஒரே காரணம். ஆதாமின் இனத்திலிருந்து வந்த ஒவ்வொரு தனிநபருக்கும் இது போதுமானதாய் இருக்கிறது. இந்த பரிகாரமானது கிருபையாக, யாரெல்லாம் ஒழுக்கரீதியில் பொறுப்பேற்க இயலாதவர்களாய் இருக்கிறார்களோ அவர்களுக்கும், குற்றமற்ற குழந்தைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆனால் பொறுப்புடைமையின் வயதை எட்டியவர்களுக்கு, மனம்திரும்பி விசுவாசிக்கும்போது மட்டுமே இந்த பரிகாரம் அவர்களின் இரட்சிப்புக்கு பயனுள்ளதாய் இருக்கும்.

ஏசாயா 53:5-6,11; மாற்கு 10:45; லூக்கா 24:46-48; யோவான் 1:29; 3:14-17; அப்போஸ்தலர் 4:10-12; ரோமர் 3:21-26; 4:17-25; 5:6-21; 1 கொரிந்தியர் 6:20; 2 கொரிந்தியர் 5:14-21; கலாத்தியர் 1:3-4; 3:13-14; கொலோசெயர் 1:19-23; 1 தீமோத்தேயு 2:3-6; தீத்து 2:11-14; எபிரெயர் 2:9; 9:11-14; 13:12; 1 பேதுரு 1:18-21; 2:19-25; 1 யோவான் 2:1-2

## கட்டுரை 7

# முந்தி நிகழ்கிற கிருபை

தேவன் தம்முடைய சாயலில் மனிதனை உருவாக்கியது, நன்மை தீமை அறியத்தக்க திறனையும் உள்ளடக்கியது என்று நாங்கள் நம்புகிறோம்; எனவே, மனிதர்கள் ஒழுக்கரீதியில் பொறுப்புடையவர்கள். ஆதாமுடைய விழுகையின் மூலம் அவர்கள் ஒழுக்கச் சிதைவடைந்தனர். அதனால், அவர்கள் இப்போது தாமாகவே திரும்பி, தங்கள் சுயபெலத்தினாலோ, கிரியையினாலோ விசுவாசிக்கவும் தேவனை நோக்கிக் கூப்பிடவும், தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள முடியாது. ஆனால் தேவனுடைய கிருபையானது இயேசு கிறிஸ்துவின் மூலம் இலவசமாக, எல்லா மனிதர்கள் மேலும் அள்ளி அருளப்பட்டிருக்கிறது. யாரெல்லாம் பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்பவும், மன்னிப்பு மற்றும் பாவ சுத்திகரிப்பிற்கு இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும், அவருடைய பார்வைக்குப் பிரியமும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதுமான நல்ல செயல்களைப் பின்பற்றவும் விரும்புகிறார்களோ அவர்களை அவற்றை செய்ய இயல்விக்கிறது.

எல்லா நபர்களும், மறுபிறப்படைந்து, முற்றிலும் பரிசுத்தமாக்கப்படும் அநுபவத்தை உடையவர்களாக இருந்தாலும், கிருபையிலிருந்து விழவும், விசுவாசத்தை மறுதலிக்கவும் முடியும். தங்கள் பாவத்திலிருந்து அவர்கள் மனம்திரும்பாத பட்சத்தில், நம்பிக்கையற்றவர்களாய் நித்தியமாக இழக்கப்படுவார்கள்.

தேவனைப்போன்றிருத்தல் மற்றும் ஒழுக்கரீதியான பொறுப்புடைமை: ஆதியாகமம் 1:26-27; 2:16-17; உபாகமம் 28:1-2; 30:19; யோசுவா 24:15; சங்கீதம் 8:3-5; ஏசாயா 1:8-10; எரேமியா 31:29-30; எசேக்கியேல் 18:1-4; மீகா 6:8; ரோமர் 1:19-20; 2:1-16; 14:7-12; கலாத்தியர் 6:7-8

இயற்கையில் இயலாமை: யோபு 14:4; 15:14; சங்கீதம் 14:1-4; 51:5; யோவான் 3:6a; ரோமர் 3:10-12; 5:12-14, 20a; 7:14-25

இலவசமான கிருபை மற்றும் விசுவாசக் கிரியைகள்: எசேக்கியேல் 18:25-26; யோவான் 1:12-13; 3:6b; அப்போஸ்தலர் 5:31; ரோமர் 5:6-8,18; 6:15-16,23; 10:6-8; 11:22; 1 கொரிந்தியர் 2:9-14; 10:1-12; 2 கொரிந்தியர் 5:18-19; கலாத்தியர் 5:6; எபேசியர் 2:8-10; பிலிப்பியர் 2:12-13; கொலோசெயர் 1:21-23; 2 தீமோத்தேயு 4:10a; தீத்து 2:11-14; எபிரெயர் 2:1-3; 3:12-15; 6:4-6; 10:26-31; யாக்கோபு 2:18-22; 2 பேதுரு 1:10-11; 2:20-22

## கட்டுரை 8

# மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் என்பது பாவம் தொடர்பாக, உண்மையாக, முழுமையாக மனம் மாறிய நிலை என்று நாங்கள் நம்புகிறோம். இது தனிப்பட்ட குற்ற உணர்வை உள்ளடக்கியதாகும். தன்னார்வமாகப் பாவத்தைவிட்டுத் திரும்புதல் கிரியையினாலும், நோக்கத்தினாலும் தேவனுக்கு விரோதமாகப் பாவிகளாய் மாறின ஒவ்வொருவருக்கும் வேண்டிய ஒருகாரியமாகும். மனந்திரும்புகிற அனைவருக்கும் பரிசுத்த ஆவியானவர் கிருபையுள்ள உதவியாக தவருக்கு பச்சாத்தாபம் கொள்ளும் இருதயம், இரக்கத்தின் நம்பிக்கை கொடுக்கிறார். இதனால் அவர்கள் மன்னிப்பு மற்றும் ஆவிக்குரிய வாழ்வை விசுவாசிக்க முடியும்.

2 கொரிந்தியர் 7:14; சங்கீதம் 32:5-6; 51:1-17; ஏசாயா 55:6-7; எரேமியா 3:12-14; எசேக்கியேல் 18:30-32; 33:14-16; மாற்கு 1:14-15; லூக்கா 3:1-14; 13:1-5; 18:9-14; அப்போஸ்தலர் 2:38; 3:19; 5:31; 17:30-31; 26:16-18; ரோமர் 2:4; 2 கொரிந்தியர் 7:8-11; 1 தெசலோனிக்கேயர் 1:9; 2 பேதுரு 3:9

## கட்டுரை 9

# நீதிமான்களாக்கப்படுதல், மீளுருவாக்கம், மற்றும் தத்தெடுத்தல்

நீதிமான்களாக்கபடுதல் என்பது தேவனுடைய கிருபையுள்ள மற்றும் நீதியான ஒரு செயல் என்று நாங்கள் நம்புகிறோம். இதன்மூலம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்கும் அவர், அனைத்துக் குற்றங்களிலிருந்தும் முழு மன்னிப்பு, செய்த பாவங்களுக்கான தண்டனையிலிருந்து முழு விடுதலை தருகிறார் மற்றும் நீதிமானாக ஏற்றுக்கொள்ளுகிறார்.

மீளுருவாக்கம் அல்லது மறுபிறப்பு என்பது, தேவனுடைய கிருபையுள்ள செயல் என்று நம்புகிறோம். அதனால், மனந்திரும்பிய விசுவாசியின் தார்மீகத் தன்மையானது ஆவிக்குரிய வகையிலே உயிர்ப்பிக்கப்படுகிறது. மேலும், விசுவாசம், அன்பு மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்கான திறனுடைய தனித்தன்மை வாய்ந்த ஆவிக்குரிய வாழ்வு கொடுக்கப்படுகிறது.

தத்தெடுத்தல் என்பது தேவனுடைய கிருபையுள்ள ஒரு செயலாகும். இதன்மூலம் நியாயப்படுத்தப்பட்டு, மறுபிறப்படைந்த விசுவாசி தேவனுடைய குமாரன் ஆவார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

நீதிமானாக்கப்படுதல், மீளுருவாக்கம் மற்றும் தத்தெடுத்தல் அனைத்தும் தேவனைத் தேடுகிறவர்களின் அனுபவத்திலே ஒரே நேரத்தில் நடைபெறும் காரியங்கள் ஆகும். மற்றும் மனந்திரும்புதலுக்கு முன்னால், விசுவாசத்தின் நிலையைப் பொருத்து இவைப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்று நாங்கள் நம்புகிறோம். இந்தக் கிரியை மற்றும் கிருபையின் ஸ்திதிக்கு பரிசுத்த ஆவியானவர் சாட்சியாக இருக்கிறார்.

லூக்கா 18:14; யோவான் 1:12-13; 3:3-8; 5:24; அப்போஸ்தலர் 13:39; ரோமர் 1:17; 3:21-26,28; 4:5-9, 17-25; 5:1, 16-19; 6:4; 7:6; 8:1, 15-17; 1 கொரிந்தியர் 1:30; 6:11; 2 கொரிந்தியர் 5:17-21; கலாத்தியர் 2:16-21; 3:1-14,26; 4:4-7; எபேசியர் 1:6-7; 2:1, 4-5; பிலிப்பியர் 3:3-9; கொலோசெயர் 2:13; தீத்து 3:4-7; 1 பேதுரு 1:23; 1 யோவான் 1:9; 3:1-2,9; 4:7; 5:1, 9-13, 18.

## கட்டுரை 10

# கிறிஸ்தவ புனிதத்தன்மை மற்றும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுதல்

பரிசுத்தமாக்கப்படுதல் ஆனது விசுவாசியை தேவனுடைய சாயலில் மாற்றும் தேவனுடைய செயல் என்று நாங்கள் நம்புகிறோம். அது தேவனுடைய கிருபையினாலே, பரிசுத்த ஆவியானவர்மூலம் செய்யப்பட்ட ஆரம்ம பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது, மறுபிறப்படைதல் (நீதிமானாக்கப்படுவதோடுகூட ஒரே நேரத்தில்), முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியானவருடைய தொடர்ச்சியான பூரணமாக்கும்

கிரியை மகிமைப்படுத்தப்படுதலில் நிறைவடைதல். மகிமையடைதலில் நாம் முற்றிலும் குமாரனுடைய சாயலுக்கு ஒத்திருப்போம்.

முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுதலானது, தேவனுடைய செயல் என்று நாங்கள் நம்புகிறோம். இது மறுபிறப்படைதலுக்குப் பின்னர் ஆகும். இதன்மூலம் விசுவாசிகள் அசல் பாவத்திலிருந்து அல்லது ஒழுக்க சீர்கேட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, முற்றிலும் தேவபக்தியுள்ள ஒரு நிலைக்குக் கொண்டுவரப்படுகின்றனர் மேலும் அன்பின் பரிசுத்தக் கீழ்ப்படிதலானது பூரணப்படுகிறது.

இது பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானம் அல்லது நிரப்புதல் மூலம் செய்யப்பட்டது. மற்றும் ஒருவரின் பாவத்திலிருந்து இருதயம் சுத்திகரிக்கப்படுதல் அறிந்துக்கொள்ளப்படுகிறது. மற்றும் நிலையான நம்மில் வாசம்செய்கிற பரிசுத்த ஆவியின் பிரசன்னம் விசுவாசியை வாழ்க்கைக்கைக்கும், சேவைக்கும் மேம்படுத்துகிறது.

முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுதல் ஆனது இயேசுவின் இரத்தத்தினாலே வழங்கப்படுகிறது. கிருபையினாலே விசுவாசத்தின் மூலம் உடனடியாக செய்யப்படுகிறது. இதற்கு முன்னர் முழு அர்ப்பணம் நடைபெறுகிறது. இந்தக் கிரியை மற்றும் கிருபையின் ஸ்திதிக்கு பரிசுத்த ஆவியானவர் சாட்சியாக இருக்கிறார்.

இந்த அனுபவமானது அதன் வேறுபட்ட நிலைகளைக் குறிக்கும்வகையில் பல்வேறு சொற்களில் அறியப்படுகிறது. “கிறிஸ்தவ பரிபூரணம்”, “பூரண அன்பு”, “இருதயத் தூய்மை”, “பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகிற ஞானஸ்நானம்”, “சம்பூரண ஆசீர்வாதம்”, மற்றும் “கிறிஸ்தவ புனிதத்தன்மை”.

சுத்த இருதயத்திற்கும், முதிர்ச்சியுள்ள குணத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க வித்தியாசம் உண்டு என்று நாங்கள் நம்புகிறோம். முந்தையது முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுதலின் விளைவாக உடனடியாகப் பெறப்படுகிறது. பிந்தையது கிருபையிலே வளர்ச்சியடைவதின் பயனாகக் கிடைக்கிறது.

முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுதலின் கிருபையானது, கிறிஸ்துவைப்போன்ற சீஷனாவதற்கு, கிருபையில் வளர்வதற்கான தெய்வீகத் தூண்டுதலை உள்ளடக்கியது என்று நாங்கள் நம்புகிறோம். எனினும் இந்த தூண்டுதலானது முழு உணர்வுடன் பராமரிக்கப்படவேண்டும். குணத்திலும், தனித்தன்மையிலும் கிறிஸ்துவைப்போன்றிருத்தலில், ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தேவைகள் மற்றும் செயல்முறைகளில் ஜாக்கிரதையுடன் கவனம் செலுத்தப்படவேண்டும். இப்படிப்பட்ட குறிக்கோளுடன்கூடிய முயற்சி இல்லாவிட்டால், ஒருவருடைய சாட்சி பெலவீனப்பட முடியும். கிருபையும் கூட அதிருப்தியுற்று இறுதியில் இழக்கப்படும் நிலை வரலாம்.

கிருபையின் வழிமுறைகளில் - குறிப்பாக ஐக்கியம், ஒழுங்குமுறைகள், மற்றும் திருச்சபையின் புனித சடங்குகள் - பங்குபெறுவதின் மூலம் விசுவாசிகள் கிருபையிலும், கர்த்தரிடத்திலும், மற்றவர்களிடத்திலுமான அன்பிலும் வளர்கின்றனர்.

எரேமியா 31:31-34; எசேக்கியேல் 36:25-27; மல்கியா 3:2-3; மத்தேயு 4:11-12; லூக்கா 3:16-17; யோவான் 7:37-39; 14:15-23; 17:6-20; அப்போஸ்தலர் 1:5; 2:1-4; 15:8-9; ரோமர் 6:11-13, 19; 8:1-4, 8-14; 12:1-2; 2 கொரிந்தியர் 6:14-7:1; கலாத்தியர் 2:20; 5:16-25; எபேசியர் 3:14-21; 5:17-18, 25-27; பிலிப்பியர் 3:10-15; கொலோசெயர் 3:1-17; 1 தெசலோனிக்கேயர் 5:23-24; எபிரெயர் 4:9-11; 10:10-17; 12:1-2; 13:12; 1 யோவான் 1:7,9.

"கிறிஸ்தவ பரிபூரணம்", பூரண அன்பு": உபாகமம் 30:6; மத்தேயு 5:43-48; 22:37-40; ரோமர் 12:9-21; 13:8-10; 1 கொரிந்தியர் 13; பிலிப்பியர் 3:10-15; எபிரெயர் 6:1; 1 யோவான் 4:17-18

"இருதயத் தூய்மை": மத்தேயு 5:8; அப்போஸ்தலர் 15:8-9; 1 பேதுரு 1:22; 1 யோவான் 3:3

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்: எரேமியா 31:31:34; எசேக்கியேல் 36:25-27; மல்கியா 3:2-3; மத்தேயு 3:11-12; லூக்கா 3:16-17; அப்போஸ்தலர் 1;5; 2:1-4; 15:8-9

"சம்பூரண ஆசீர்வாதம்": ரோமார் 15:29

"கிறிஸ்தவ புனிதத்தன்மை": மத்தேயு 5:1-7:29; யோவான் 15:1-11; ரோமர் 12:1-15:3; 2 கொரிந்தியர் 7:1; எபேசியர் 4:17-5:20; பிலிப்பியர் 1:9-11; 3:12-15; கொலோசெயர் 2:20-3:17; 1 தெசலோனிக்கேயர் 3:13; 4:7-8; 5:23; 2 தீமோத்தேயு 2:19-22; எபிரெயர் 10:19-25; 12:14; 13:20-21; 1 பேதுரு 1:15-16; 2 பேதுரு 1:1-11; 3:18; யூதா 20-21

## கட்டுரை 11

## திருச்சபை

இயேசு கிறிஸ்துவை கர்த்தர் என்று அறிக்கை செய்கிற சமூகம், கிறிஸ்துவுக்குள் புதிதாக்கப்பட்ட தேவனுடைய உடன்படிக்கையின் மக்கள், பரிசுத்த ஆவியினாலே வார்த்தையைக்கொண்டு, கிறிஸ்துவின் சரீரமாக அழைக்கப்பட்டவர்கள் ஆகிய திருச்சபையை நாங்கள் நம்புகிறோம்.

தேவன் தம்முடைய திருச்சபையை, ஆவியின் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தினாலும், வார்த்தையை பிரசங்கித்தல், சாக்ரமந்துகளைக் கைக்கொள்ளுதல், அவர் நாமத்தில் ஊழியம் செய்தல் இன்னும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதல், பரிசுத்த வாழ்க்கை, பரஸ்பர பொறுப்புடைமை ஆகியதான ஆராதனையிலும் அதின் வாழ்க்கையை வெளிப்படுத்திக்காட்ட அழைக்கிறார்.

இந்த உலகத்திலே திருச்சபையின் ஊழியமானது, பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே கிறிஸ்துவினுடைய மீட்பு மற்றும் ஒப்புறவாக்குதலின் ஊழியத்திலே அவரோடுகூட பங்கு பெறுவதாகும். திருச்சபையானது, நற்செய்தியின் மூலம் சீஷர்களை உருவாக்குவதின் மூலமும், கல்வி, கருணை காட்டுதல், நீதிக்காக கிரியை செய்தல், தேவனுடைய ராஜ்யத்திற்கென்று சாட்சியாயிருத்தல் ஆகியவற்றின்மூலம், தன் ஊழியத்தை நிறைவேற்றுகிறது.

திருச்சபையானது கலாச்சார நிபந்தனைக்குட்பட்ட வடிவங்களில், தன்னை ஒழுங்கமைத்துக்கொள்ளும் வரலாற்று உண்மை ஆகும். உள்ளூர் சபைகள், மற்றும் உலகளாவிய சரீரமாக இரண்டு முறையில்

இருக்கிறது. பிரத்யேகமான ஊழியங்களுக்கு தேவனால் அழைக்கப்பட்ட மக்களை பிரித்தெடுக்கிறது. தேவன் திருச்சபையை தம்முடைய கட்டளையின்கீழ் வாழும்படிக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முழுமையாக எதிர்ப்பார்த்திருக்கும்படிக்கும் அழக்கிறார்.

யாத்திராகமம் 19:3; எரேமியா 31:33; மத்தேயு 8:11; 10:7; 16:13-19, 24; 18:15-20; 28:19-20; யோவான் 17:14-26; 20:21-23; அப்போஸ்தலர் 1:7-8; 2:32-47; 6:1-2; 13:1; 14:23; ரோமர் 2:28-29; 4:16; 10:9-15; 11:13-32; 12:1-8; 15:1-3; 1 கொரிந்தியர் 3:5-9; 7:17; 11:1, 17-33; 12:3, 12-31; 14:26-40; 2 கொரிந்தியர் 5:11-6:1; கலாத்தியர் 5:6, 13-14; 6:1-5, 15; எபேசியர் 4:1-17; 5:25-27; பிலிப்பியர் 2:1-16; 1 தெசலோனிக்கேயர் 4:1-12; 1 தீமோத்தேயு 4:13; எபிரெயர் 10:19-25; 1 பேதுரு 1:1-2, 13; 2:4-12, 21; 4:1-2, 10-11; 1 யோவான் 4:17; யூதா 24; வெளி 5:9-10

## கட்டுரை 12

# ஞானஸ்நானம்

நம்முடைய கர்த்தரால் கட்டளையிடப்பட்ட ஞானஸ்நானமானது, ஒரு அருளடையாளம், மற்றும் இயேசு கிறிஸ்துவின் பரிகாரத்தினால் உண்டான பயன்களை ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது. இது விசுவாசிகளுக்காக நிர்வகிக்கப்படவேண்டிய ஒன்று. இது தங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவில் உள்ள அவர்களது விசுவாசத்தை அறிக்கையிடும் ஒன்றாகும், மேலும் இது, பரிசுத்தத்திலும், நீதியிலும் கீழ்ப்படிதலின் முழு நோக்கம் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஞானஸ்நானமானது புது உடன்படிக்கையின் அடையாளமாக இருக்கிறது, பெற்றோர் அல்லது உத்தரவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க இளம் குழந்தைகளும் ஞானஸ்நானம் பெறலாம். இவர்கள் அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான கிறிஸ்தவ பயிற்சிகளுக்கு உத்தரவாதம் கொடுப்பர்.

ஞானஸ்நானமானது விண்ணப்பத்தாரர்களின் தேர்வுப்படி தண்ணீர் தெளித்து, ஊற்றி அல்லது மூழ்கி எடுக்கும்படி நிர்வகிக்கப்படலாம்.

மத்தேயு 3:1-7; 28:16-20; அப்போஸ்தலர் 2:37-41; 8:35-39; 10:44-48; 16:29-34; 19:1-6; ரோமர் 6:3-4; கலாத்தியர் 3:26-28; கொலோசெயர் 2:12; 1 பேதுரு 3:18-22;

## கட்டுரை 13

# கர்த்தருடைய இராப்போஜனம்

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட, நினைவு மற்றும் ஒன்றிப்பின் இராப்போஜனமானது முக்கியமாக புதிய ஏற்பாட்டு அருளடையாளமாகும். அவருடைய அர்ப்பணிப்புள்ள மரணத்தை - அதன் தகுதிபாடுகளால் விசுவாசிகள் ஜீவனையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொள்கிறார்கள், மற்றும் கிறிஸ்துவுக்குள் எல்லா ஆசீர்வாதங்களின் வாக்குத்தத்தத்தையும் பெறுகிறார்கள் - அறிக்கை செய்தல் ஆகும் என்று நாங்கள் நம்புகிறோம். இது குறிப்பாக, யாரெல்லாம் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பயபக்திக்குறிய நன்றியறிதலோடு இருக்கிறார்களோ அவர்களுக்கு உடையதாகும். இதனால் அவர்கள் அவர் மீண்டும் வரும்வரை, அவருடைய மரணத்தை எடுத்துக் காட்டுகிறார்கள். அது ஒன்றிப்பின் விருந்தாக இருப்பதால், கிறிஸ்துவின் மீது விசுவாசமும், பரிசுத்தவான்களிடத்தில் அன்பும் உடையவர்கல் மட்டுமே அதில் கலந்துக்கொள்ள அழைக்கப்படவேண்டும்.

யாத்திராகமம் 12:1-14; மத்தேயு 26:26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:17-20; யோவான் 6:28-58; 1 கொரிந்தியர் 10:14-21; 11:23-32

## கட்டுரை 14

# தெய்வீக சுகம்

தெய்வீக சுகத்தைக் குறித்த வேதாகம உபதேசத்தை நாங்கள் நம்புகிறோம். மேலும் வியாதியஸ்தரின் சுகத்திற்காக விசுவாச ஜெபங்களை ஏறெடுக்கும்படிக்கு, எங்கள் மக்களை வலியுறுத்துகிறோம். மருத்துவ அறிவியல் மூலமும் தேவன் சுகம் அளிக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம்.

2 ராஜாக்கள் 5:1-19; சங்கீதம் 103:1-5; மத்தேயு 4:23-24; 9:18-35; யோவான் 4:46-54; அப்போஸ்தலர் 5:12-16; 9:32-42; 14:8-15; 1 கொரிந்தியர் 12:4-11; 2 கொரிந்தியர் 12:7-10; யாக்கோபு 5:13-16

## கட்டுரை 15

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்று நாங்கள் நம்புகிறோம். கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. நாம் அவருக்குள் நிலைத்திருந்தால், உயிர்த்தெழுந்தப் பரிசுத்தவான்களோடே ஆகாயத்தில் கர்த்தரைப் பார்க்கும்படிக்கு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.

மத்தேயு 25:31-46; யோவான் 14:1-3; அப்போஸ்தலர் 1:9-11; பிலிப்பியர் 3:20-21; 1 தெசலோனிக்கேயர் 4:14-18; தீத்து 2:11-14; எபிரெயர் 9:26-28; 2 பேதுரு 3::3-15; வெளி 1:7-8; 22:7-20.

## கட்டுரை 16

# உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு மற்றும் சேருமிடம்

நாங்கள் மரித்தோர் உயிர்த்தெழுதலை நம்புகிறோம். இதில் நீதிமான்கள் அநீதிமான்கள் ஆகிய இருதிறத்தாருடைய சரீரங்களும் உயிர்ப்பிக்கப்பட்டு அவர்களுடைய ஆவியோடு இணைந்துக்கொள்ளும் - "நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்".

நாங்கள் வரப்போகிற நியாயத்தீர்ப்பை விசுவாசிக்கிறோம். அதில் ஒவ்வொரு நபரும் அவன் அல்லது அவள் இந்த வாழ்க்கையில் செய்த கிரியைகளுக்கு நியாயத்தீர்ப்படையும்படி தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சிப்பிற்கேற்க விசுவாசித்து, கீழ்ப்படிதலோடு அவரைப் பின்பற்றுகிற அனைவருக்கும் மகிமையான நித்திய வாழ்வு உறுதியளிக்கப்பட்டிருக்கிறதென்று நம்புகிறோம். இறுதியாக, மனந்திரும்பாதவர்கள் நித்தியமாக நரகத்திலே பாடுபடுவார்கள்.

ஆதியாகமம் 18:25; 1 சாமுவேல் 2:10; சங்கீதம் 50:6; ஏசாயா 26:19; தானியேல் 12:2-3; மத்தேயு 25:31-46; மாற்கு 9:43-48; லூக்கா 16:19-31; 20:27-38; யோவான் 3:16-18; 5:25-29; 11:21-27; அப்போஸ்தலர் 17:30-31; ரோமர் 2:1-16; 14:7-12; 1 கொரிந்தியர் 15:12-58; 2 கொரிந்தியர் 5:10; 2 தெசலோனிக்கேயர் 1:5-10; வெளி 20:11-15; 22:1-15.